OS.No. 131/2015

Dated : 28.11.2023

Time: 12.30 p.m to 12.45 p.m

P.W-1 சாட்சி விஜயலட்சுமி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 4ம் பிரதிவாதி சார்பாக குறுக்கு விசாரணை தொடர்ச்சி

குறுக்கு விசாரணை

6) சர்வே எண். 89/7 பரிவர்த்தனை மூலமாக கடந்த 03.12.1993 1,2 பிரதிவாதிகளுக்கும் அவருடைய தாயார் ஈஸ்வரிக்கும் பரிவர்த்தனை மூலமாக பாத்தியப்பட்டது என்றால் அது செல்லாது. அதில் கண்டுள்ள சர்வே எண்ணை நான் இவ்வழக்கில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சர்வே எண் சொல்லாமல் அந்த ஆவணம் செல்லாது என பரிகாரம் கோரவே எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் ஜெயராமன் வீடு கட்டியுள்ளார் என்றால் சரிதான். அதன் மதிப்பு தற்போது 40 லட்சம்போகும் என்றால் சரிதான். மேற்படி தொகைக்கு நான் இவ்வழக்கில் நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை என்றால் சரிதான். மேற்படி சொத்தின் மதிப்பு 40 லட்சம் என்றும் எனவே இந்த நீதிமன்றத்தின் ஆள்வரையறைக்குள் இவ்வழக்கு வராது என்றால் எனக்கு அந்த சொத்தின் மதிப்பு தெரியாது. 1575 சதுரடி நிலத்திற்கு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

7) மேற்படி வீட்டை நான் வழக்கு சொத்தை நான் காண்பிக்கவில்லை என்றால் சரியல்ல காண்பித்துள்ளேன். மேற்படி வழக்கிற்கு முன்பே ஜெயராமன் மேற்படி வீட்டை கட்டிவிட்டார் என்றால் சரிதான். மேற்படி வீட்டின் மதிப்பை குறிப்பிட்டால் இந்த நீதிமன்றத்தின் ஆள்வரையறைக்குள் வராது என்பதால் தான் அதை நான் வேண்டுமென்றே மறைத்துவிட்டேன் என்றால் சரியல்ல. மேற்படி ஜெயராமனுக்கு ஒதுக்கிய சொத்து சர்வே எண். 89/8 பி என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி வழக்கில் எந்த சர்வே எண் முன்நிறுத்தியுள்ளேன் என்று தெரியாது. நான் சர்வே எண். 89/8 க்குதான் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சர்வே எண்கள் எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி வழக்கிற்கு முன்பே அந்த தாவா சர்வே எண். 89/8 என்பது 8 ஏ, 8 பி என உட்பிரிவு செய்யப்பட்டுவிட்டது என்றால் அது பொய். வழக்கு சம்மந்தமான வருவாய் ஆவணங்களை நான் முன்நிறுத்தவில்லை என்றால் சரியல்ல.

8) மேற்படி கணேசனுக்கு பாத்தியப்பட்டுள்ள சர்வே எண். 89/7 தாவாவில் காட்டப்படவில்லை என்றால் அது தவறு. மேற்படி தாவா சொத்தில் எங்களுக்கு எவ்வித உரிமையும் அனுபவமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அதனால் தான் எனக்கு தாவா சொத்தின் விவரங்கள் தெரியவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு காலவரையறை சட்டத்திற்குள் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் இவ்வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. மேற்படி கணேசனுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்கும் உயில் சொத்துக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. கணேசனின் தாயார் 2001 ல் காலமாகிவிட்டார். எனவே அவருக்கு அவர் தாயார் சொத்தில் பாகம் உள்ளது. அவர் தாயாருக்கும் அவருடைய சொத்தில் பாகம் உள்ளது என்றால் சரியல்ல. எப்படி பார்த்தாலும் நாங்கள் பாகம் கோருவது விகிதாசாரப்படி தவறு என்றும் எனவே இவ்வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல எனறும் எனவே செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக்கொள்ளப்பட்டது."

**Sd/- K.Ananthan,**
**Subordinate Judge,**
**Attur.**